

Vol.28 | No. 02 | February 2024
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



**Silver Jubilee Celebrations of St. Mary's Minor Seminary, Mukkoottukal, 2024 January 27**



**Priestly Ordination of Dn. Liju Marattukalam, 2024 January 02 @ Chethipuzha**



New Year & Denha Celebrations - 2024 January 07
@ Cumbum



Church Feast - St.Chavara Church, Kuttaicode
2024 January 07



Bible Fest Diocesan level competition, 2024
January 13 @ Padanthalumoodu

The Official Organ of the Diocese of Thuckalay
Volume 28 No :02 February 2024



# இறையருள்
# IRAIARUL

## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Mr. Edwinson**

**Mr. Iyathurai**

**M.R.Merin Sujith**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

DTP & Designed

**Merin Sujith**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் சற்றுமடல் | 07 |
| அருட்தந்தை செபாஸ்டின் மஞ்சேரிக்களம் | 11 |
| மறைக்கல்வி | 13 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 18 |
| இல்வாழ்வு இயக்கம் | 20 |
| வின்சென்ட் தே பவுல் சபை | 22 |
| தக்கலை இளையோர் கல்வி பணியகம் | 23 |
| நலவாழ்வு பணிக்குழு | 24 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 25 |
| புலரி சமூக சேவை சங்கம் | 27 |
| மறைமாவட்ட செய்திகள் | 29 |
| தென்காசி மறைபரப்புதள செய்திகள் | 31 |
| மறைவட்ட செய்திகள் | 32 |
| MONTHLY AGENDA - FEBRUARY 2024 | 37 |
| BISHOP'S ENGAGEMENTS | 39 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/154/2024**
**31 January 2024**

**Dear Readers,**

Greetings from the Bishop's House, Thuckalay!

As we are commencing the holy season of Lent on 12 February 2024, with Ash Monday, let me reflect with you on its importance in our Syro-Malabar tradition.

Lent, a period of fasting, prayer, and penance, is a significant liturgical season observed as a spiritual journey towards the celebration of the resurrection of Jesus Christ. In the Syro-Malabar Church, Lent holds immense significance, and its observance is deeply rooted in East Syrian tradition.

The Lenten season in the Syro-Malabar Church is known as the 'Great Lent' *(Valiya Nombu)* or *Sauma Ramba*. History tells us that the Lent has two fundamental aims: A long preparation for Easter and a proximate preparation for baptism on Holy Saturday. Lent begins on the seventh Monday before Easter. The Lenten practices in this tradition are characterized by a combination of asceticism, liturgy, and spiritual exercises.

The asceticism consists of fasting and abstinence. These practices are rooted in various religious traditions and hold significant spiritual and ethical implications. While interpretations may vary among different faiths, the underlying principles often include self-discipline, spiritual purification, and a heightened awareness of one's relationship with the divine.

It is a matter of tradition and good faith that most Christians of Syro-Malabar tradition eat only vegetarian meals for 50 full days and abstain from meat, fish and alcohol voluntarily. This has been praised as one of the finest spiritual offerings of the local Christians.

The practice of fasting and abstinence has deep roots in the Bible, appearing in both the Old and New Testaments. In the Old Testament, figures like Moses and Elijah were engaged in

fasting as a means of seeking God's guidance and demonstrating repentance. The New Testament highlights the 40-day fast of Jesus in the wilderness (Mt 4:2), serving as a model for Christian fasting. Additionally, the teachings of Jesus in the Sermon on the Mount emphasize the importance of fasting as a private and sincere act, devoid of ostentation (Mt 6:17).

Fasting and abstinence are considered spiritual weapons aimed at cultivating self-control and discipline. By abstaining from certain foods or activities, individuals create space for reflection, prayer, and a heightened sensitivity to spiritual matters. The intentional denial of physical desires serves as a way to focus on spiritual nourishment and the pursuit of a deeper connection with God.

In Christian theology, fasting and abstinence are often linked to the sacrificial nature of the life and death of Jesus Christ. By willingly giving up comforts and indulgences, believers participate symbolically in the self-sacrifice of Christ on the cross. This identification with Christ's sacrifice fosters a sense of solidarity with the redemptive work of Christ and a commitment to live by his teachings.

Fasting and abstinence are associated with repentance and purification. The intentional renunciation of certain pleasures serves as a tangible expression of sorrow for sin and a commitment to turn away from ungodly behaviour. The period of Lent, in particular, is often characterized by a focus on repentance, and fasting becomes a means of purifying one's heart and soul.

The theology of fasting and abstinence extends beyond personal piety to encompass social justice and solidarity with the less fortunate. By voluntarily experiencing hunger or discomfort, individuals are reminded of the struggles faced by those who lack necessities. This awareness often leads to a commitment to charitable acts, almsgiving, and advocacy for social justice issues.

Fasting is seen not only as a spiritual discipline but also as a means of promoting physical and mental wellbeing. The intentional abstention from certain foods or practices can have health benefits, and many religious traditions view this as a holistic approach to caring for the body, which is considered a temple of the Holy Spirit.

Fasting and abstinence are viewed as transformative processes that lead to personal renewal. Through the denial of immediate

gratification, believers seek to detach from worldly distractions and refocus their priorities on spiritual growth and communion with God. The ultimate goal is a transformed and renewed life that reflects the values of the Kingdom of God.

The practice of fasting emphasizes the freedom from attachments to material pleasures. By voluntarily choosing to abstain from certain foods or activities, individuals assert their mastery over physical desires and dependencies. This freedom allows for a more intentional and liberated pursuit of a life centred on spiritual values.

Thus, fasting and abstinence form a central aspect of Lent in the Syro-Malabar Church. The faithful abstain from certain types of food, especially meat and dairy, during this period. The intensity of fasting and abstinence may vary, with stricter observance among the clergy and monastics. Fasting and abstinence are seen as a way to discipline the body, focus on spiritual growth, and share in the sacrificial journey of Christ.

The Syro-Malabar liturgy during Lent is marked by solemnity and penance. Special prayers, scripture readings, and liturgical hymns characterize the worship services. The Holy Qurbana undergoes modifications during Lent to reflect the penitential nature of the season. The faithful participate in additional liturgical services, such as the Stations of the Cross, which symbolically retraces the steps of Jesus on his way to Calvary.

Lent is a time for intensified personal and communal prayer. Through prayer, individuals can draw closer to God, seek guidance, and cultivate a spirit of humility and dependence on divine grace. Prayer becomes a vehicle for reflecting on the sacrifice of Christ and understanding the profound love that led him to the cross. The faithful engage in practices such as daily scripture readings, the Liturgy of the Hours, and personal reflections on their spiritual journey. This period encourages self-examination, repentance, and a deeper connection with God through prayer.

Charity and almsgiving are integral components of Lent in the Syro-Malabar Church. The faithful are encouraged to engage in acts of kindness, generosity, and service to those in need. This reflects the Christian call to share God's love and mercy with others, mirroring the selfless sacrifice of Jesus on the cross.

The Lenten practices in the Syro-Malabar Church are also

influenced by the rich cultural heritage of Kerala. The use of traditional music, art, and rituals adds a unique flavour to the observance of Lent. The vibrant traditions of Kerala, including the use of incense, floral decorations, and elaborate processions, enhance the sensory experience of worship during this season.

Throughout its history, the Syro-Malabar Church has faced challenges related to cultural shifts, external influences, and internal divisions. The church has navigated these challenges while seeking to maintain its distinctive identity and traditions, including those associated with Lent. In recent times, efforts have been made to adapt certain aspects of the Lenten observance to better resonate with the contemporary lives of the faithful without compromising the essence of the season.

Lent is a season to stop all worldly pleasures and to return to God. This period motivates the faithful to enter into the process of being one with Jesus through his paschal mysteries of suffering, death, and burial as the bridal price of purification.

The origin, history, and practices of Lent in the Syro-Malabar Church in Kerala, thus, are deeply intertwined with the broader narrative of Christianity in India. The church's unique blend of apostolic foundations, East Syrian traditions (Eastern Christian traditions), and adaptations to local culture has shaped the way Lent is observed in this community. Through fasting, liturgy, prayer, and acts of charity, the Syro-Malabar faithful embark on a spiritual journey during Lent, seeking to draw closer to God and emulate the sacrificial love of Jesus Christ. As the Syro-Malabar Church continues to evolve in the modern era, the observance of Lent remains a vital and dynamic expression of the church's rich spiritual heritage.

I invite every one of you to make this Lent a time of renewal of life through prayer and penance. It should be a time for personal reflection on where we stand as Christians and as priests accepting the Gospel challenges in thought, word and deed. It is also a time to assess our relationships with our family, friends, working colleagues and the other people we come in contact with, especially in our institutions. Let us convert Lent into a time for spiritual growth by being more attentive to the celebration of the liturgies. Let us use Lent to fight daily against the evil within us and around us by

practising self-control relying on the power of prayer and Scripture.

As I conclude my circular, I want to thank you, dear Fathers, for the dedicated ministry that you are undertaking in the Eparchy on behalf of our people despite all the constraints and privations that you experience. I am sure that the good Lord will bless you abundantly. Let us make the holy season of Lent grace-filled days for our people by taking the initiative in making the liturgy meaningful to them. I request you to continue praying for the intentions of the Eparchy. Let us re-dedicate ourselves to serving our people with greater enthusiasm and commitment. May the Lord continue to bless you and your ministries!

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

† George Rajendran SDB

Bishop of Thuckalay

# சீரோ மலபார் திருச்சபைக்கு புதிய உயர் பேராயர் நியமனம்

சீரோ மலபார் திருச்சபையின் நான்காவது உயர் பேராயராக ஆயர் மார் ராபேல் தட்டில் அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். காக்கநாடு உயர் பேராலய அலுவலகம் மற்றும் வட்டிக்கன் தேவாலயத்தில் 2024 ஜனவரி 10 அன்று மாலை 4.30 மணிக்கு ஒரே நேரத்தில் அறிவிப்பு வெளியானது. 2010 ஏப்ரல் 10 அன்று திருச்சூர் மறைமாவட்ட துணை ஆயராக நியமிக்கப்பட்ட இவர் தொடர்ந்து 2014 ஆம் ஆண்டு கேரளாவுக்கு வெளியே வசிக்கும் கத்தோலிக்க நம்பிக்கையாளர்களுக்கான ஆயராக நியமிக்கப்பட்டார். பின்னர் 2017 அக்டோபர் 10 அன்று ஷம்சாபாத் மறைமாவட்டத்தின் முதல் ஆயராக நியமிக்கப்பட்டார். 2024 ஜனவரி 18 மதியம் 2:30 மணியளவில் காக்கநாடு மவுண்ட் செயின்ட் தாமஸில் நடைபெற்ற விழாவில் ஆயர் மார் ராபேல் தட்டில் உயர் பேராயராக ஆயர்கள் முன்னிலையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/49/2024**

# ஆயர் சுற்றுமடல்

*ஈசோமெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!*

திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் 2025–ம் ஆண்டை சாதாரண ஜூபிலி ஆண்டாக அறிவித்துள்ளதை நாம் அறிவோம். ஈசோ பிறந்ததன் 2025 ஆண்டுகளை நினைவு கூர்ந்து இந்த ஜூபிலி ஆண்டினை நாம் கொண்டாடுவோம். 'ஜூபிலி 2025' என்று இது அறியப்படும். 2025–ம் வருடம் நமது ஆண்டவர் ஈசோ மெசியாவின் மாபெரும் ஜூபிலி ஆண்டாக கொண்டாட திருச்சபை முழுவதும் ஆயத்தமாகும் இச்சூழலில் 2024 என்னும் இந்த ஆண்டு நம்மை தயாரித்துக்கொள்ள அழைப்பு விடுக்கும் ஆண்டாகும். இது குறித்து திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களின் எண்ணங்களை உங்களிடம் பகிர்ந்து கொள்வதற்கும் 2025–ல் நாம் கொண்டாட இருக்கும் ஜூபிலிக்கான தயாரிப்பு ஆண்டாக இந்த ஆண்டை எவ்வாறு மாற்றுவது என்பதையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக இந்த சுற்றுமடலை எழுதுகிறேன்.

2025–ன் சாதாரண ஜூபிலி ஆண்டுக்கான தயாரிப்புகளின் தொடக்க விழா நமது மறைமாவட்டத்தில் 2023 டிசம்பர் 31–ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் நடைபெற்றது. மறைமாவட்டத்தின் அறிவுறுத்தலின்படி அன்றைய தினம் திருப்பலியின் இடையில் ஜூபிலி மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு ஜூபிலியின் சிறப்பு ஜெபம் சொல்லப்பட்டது. அன்றைய நாள் முதல் அனைத்து ஞாயிற்றுக் கிழமைகளிலும் காறோசுஸா ஜெபங்களில் ஒரு சிறப்பு ஜெபம் சொல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. நமது அனைத்து ஆலயங்களிலும் ஜூபிலி சின்னம் அனைவரும் பார்க்கும் விதம் காட்சிப்படுத்தபட்டது.

ஜூபிலி தொடக்க விழாவோடு சேர்ந்து உங்கள் பங்குதந்தை பகிர்ந்த முகவுரையோடு ஒரு சில கருத்துக்களை நான் சேர்த்துக் கூறுகிறேன்.

பழைய ஏற்பாட்டின் பின்னனியில் ஜூபிலி ஆண்டு என்பது ஓய்வு ஆண்டு, மறு ஆய்வு ஆண்டு, மீட்பு ஆண்டு மற்றும் ஒப்புரவு ஆண்டு (லேவியர் 25:8–13). ஆகவே ஜூபிலி 2025–ம் ஆண்டின் முன்னேற்பாடுகளை செய்யும் இந்த நேரம் கடந்த காலங்களைப் பற்றி சிந்தித்து ஆண்டவர் நம் வாழ்வில் செய்த அருஞ்செயல்களை நினைத்து நன்றி கூறுவோம். நமது நம்பிக்கையை ஆழப்படுத்தவும் ஈசோவின் போதனைகளை நம் வாழ்வில் செயல்படுத்தவும் இந்த காலக்கட்டத்தை நாம் பயன்படுத்துவோம்.

திருச்சபை வரலாற்றில் முதல்முறையாக திருத்தந்தை எட்டாம் போனிப்பஸ் என்பவர் 1300–ம் ஆண்டில் ஒரு சாதாரண ஜூபிலி ஆண்டை அறிவித்தார். சாதாரண ஜூபிலி என்பது 25 வருடங்களுக்கு ஒரு முறை கொண்டாடப்படுகிறது. 2000–ம் ஆண்டில் கொண்டாடப்பட்ட ஜூபிலி ஆண்டே இதற்கு முன் திருச்சபையில் கொண்டாடப்பட்ட சாதாரண ஜூபிலி ஆண்டு. சாதாரண ஜூபிலி ஆண்டு மட்டுமன்றி அசாதாரண ஜூபிலி வருடமும் திருச்சபையில் உண்டு. 2015–ஆண்டு திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களால் அறிவிக்கப்பட்ட இரக்கத்தின் ஆண்டே அசாதாரண ஜூபிலி ஆண்டிற்கான உதாரணம்.

2025–ம் ஆண்டிற்கான கருப்பொருள் "எதிர்நோக்கின் திருப்பயணிகள்" என்பதாகும். எதிர்நோக்குகள் நிறைந்த ஒரு எதிர்காலத்தைப் பார்த்து ஒரே நோக்குடன் நாம் ஒன்றிணைந்து செல்கின்ற பயணத்தை இவ்வார்த்தை நினைவூட்டுகின்றது. இந்த ஜூபிலி ஆண்டில் மூன்று இலக்குகள் மிக முக்கியமாக உள்ளன. முதலாவதாக, ஈசோவை ஒரு கொண்டாடட்டமாக மாற்றுதல் ஈசோவை தெளிவாக அறிந்து கொள்வதுடன் அவரை மிகவும் உண்மையாக அன்பு செய்வதற்கும் மிகவும் நெருக்கமாக பின் தொடர்வதற்கும் கவனத்தோடு முயற்சி செய்ய வேண்டிய காலகட்டம் இதுவே என்பதை நாம் உணர்ந்துக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, திருச்சபையை ஒரு கொண்டாட்டமாக மாற்றுதல். திருச்சபையின் போதனைகளில் ஆழப்படுவதிலும் சபையோடு உள்ள நமது அர்ப்பணிப்பை புதுப்பித்தலிலும் சபையின் கூட்டுறவு ஒற்றுமையில் வளர்ந்து வருவதிலும் இது ஏற்புடையதாக அமைகிறது. மூன்றாவதாக, நம்மையே ஒரு கொண்டாட்டமாக மாற்றுதல் இறைவன் நமக்கு அளித்த மாபெரும் கொடைகளான நமது திறமைகள், சுற்றுசூழல்,

திருச்சபை, நன்னெறி போன்றவற்றை பயன்படுத்தி வாழ்வை ஒரு எடுத்துக்காட்டாக மாற்றி அமைத்து நம்மையே நாம் கொண்டாட்டமாக மாற்றுவோம்.

நமது ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள ஜுபிலி சின்னம் சில நுண்ணறிவுகளை நமக்கு அளிக்கிறது. ஜுபிலி சின்னத்தில் உள்ள நான்கு நிறங்களில் நான்கு மனித உருவங்களை பார்க்கிறோம். பூமியின் நான்கு திசைகளிலிருந்து வருகின்ற முழு மனித இனத்தையும் இது குறிக்கின்றது. ஒற்றுமையும் சகோதரத்துவமும் நிறைந்த கைகளால் கைக்கோர்த்து நிற்பதை நம்மால் காண முடியும். முதலில் நிற்பவர் சிலுவையை பிடித்து இருக்கின்றார். அது நமக்கு எதிர்நோக்கை அளிக்கின்றது. நான்கு உருவங்களுக்கு கீழே பதற்றமான பிரச்சனைகள் உள்ள உலகின் சூழ்நிலைகளை விவரிக்கும் கொந்தளிக்கும் அலைகளை காண முடியும். சிலுவையின் கீழ்பாகமானது ஒரு நங்கூரத்தின் வடிவத்தில் அமைந்துள்ளது. இது ஆழமிக்க நம்பிக்கையின் அச்சாரமாக விளங்குகின்றது.

ஜுபிலி கொண்டாட்டத்திற்கு ஒன்றாக பயணிக்கும் போது நாம் மனதில் கொள்ள வேண்டிய மூன்று வார்த்தைகள் உள்ளன. அவை படிப்பு, ஜெபம், நடத்தல். இதில் இரண்டு வார்த்தைகளுக்கு இந்த தயாரிப்பின் ஆண்டில் நாம் முக்கியத்துவம் அளிக்கிறோம். அதுவே படிப்பு மற்றும் ஜெபம். படிப்பு என்பதற்கு திருத்தந்தை பிரான்சீஸ் விரும்புவது திருச்சபையின் மக்களுக்கு இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் மிக முக்கியமான நான்கு ஆவணங்களை எடுத்து கூறவும் அவற்றை கற்பதும் ஆகும். 'இறை வெளிப்படுத்தல்கள்', 'திருவழிப்பாட்டு முறைகள்', 'திருச்சபை', 'நவீன உலகில் திருச்சபை' என்னும் ஆவணங்களே இந்த வருடம் நாம் கற்பதற்காக தரப்பட்டுள்ளவை. நமது மறைமாவட்டத்தில் அனைத்து அருட்தந்தையர்களுக்கும் துறவிகளுக்கும் பொதுநிலையினர்களுக்கும் இந்த நான்கு ஆவணங்களை குறித்துள்ள சிறப்பு வகுப்புகள் இந்த ஆண்டில் நடத்துவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மறைமாவட்ட அளவில் ஜுபிலி கொண்டாட்டங்களுக்கு தலைமை தாங்க தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பு குழு உறுப்பினர்கள் இதற்கான விவரங்கள் அறிவிப்பார்கள். உறவியம் மற்றும் பக்த இயக்கங்களில் கற்பதற்காக குறிப்பேடுகள் இவ்வுறுப்பினர்கள் உங்களுக்கு தருவார்கள். திருத்தந்தையின் அழைப்பிற்கேற்ப நமது மறைமாவட்டத்தில் நடத்தப்படுகின்ற சிறப்பு வகுப்பு மற்றும் கருத்தரங்குகளிலும்

மற்றும் உறவியங்களிலும் பக்த இயக்கங்களிலும் நடத்தப்படுகின்ற வகுப்புகளிலும் அனைவரும் பங்குக் கொண்டு இதில் ஒத்துழைக்க வேண்டுமென்று நினைவூட்டுகிறேன்.

கற்றல் போலவே ஜூபிலி தயாரிப்பான ஜெபங்களில் நாம் ஆழப்பட வேண்டும். தனிப்பட்ட ஜெபங்கள், சபையின் பொதுவான ஜெபங்கள், நற்கருணை ஆராதனை, ஜூபிலி சிறப்பு ஜெபம் என்பவைக்கு இந்த கால அளவில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அந்தந்த நேரங்களில் தேவையான வழிகாட்டுதல்களை ஜூபிலி குழு உறுப்பினர்கள் உங்களுக்கு வழங்குவார்கள்.

2025 ஜூபிலி ஆண்டைக் குறிக்கோளாக கொண்டுள்ள நமது பயணம் திருச்சபையின் போதனைகளை கற்பதற்கும் ஜெபத்தில் ஆழப்படுவதற்கும் ஏற்ற தருணங்களாக நாம் மாற்றி அமைப்போம். ஜெபம் மற்றும் படிப்பு வழியாக ஈசோவின் அன்பில் வளர்வதோடு சகோதரர்களை அன்பு செய்யவும் அவர்களுக்கு சேவை புரியும் வாய்ப்பாகவும் இதை அமைப்போம். அத்துடன் நமது பங்கு செயல்பாடுகளில் உயிரோட்டமான பங்களிப்பை நாம் கொடுப்போம். மறைமாவட்டத்தின் திருத்தொண்டு பணிகளுக்கு நமது ஜெபத்தையும் உதவியையும் அளிப்போம். தேவையில் உழல்வோர்க்கு உதவுவோம். சமூகத்தில் நன்மதிப்பை பரப்புவோம். இவ்வாறு ஜூபிலியின் நற்செய்தியை உலகிற்கு பறைசாற்றுவோம். ஜூபிலி ஆண்டை ஒரு ஆசீர்வாதமான ஆண்டாக மாற்ற எதிர்நோக்கின் பயணிகளாக நாம் இணைந்து பயணிப்போம்.

*என்றும் ஈசோ மெசியாவில்*

*ஆயர் இல்லம்*

*25.01.2024*

✠ *மார் ஜார்ஜ் இராஜேந்திரன்* SDB

**தக்கலை மறைமாவட்ட ஆயர்**

# இதய அஞ்சலி

## அருட்தந்தை செபாஸ்டின் மஞ்சேரிக்களம்

சங்கனாச்சேரி உயர்மறைமாவட்டம் மலைப்பள்ளி, புனித அதனாசியஸ் ஆலய மண்ணின் மைந்தராக 1936 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9ம் தேதி திரு.ஜோசப், திருமதி மரியம் தம்பதியினருக்கு 4 வது மகனாக பிறந்தவர் தான்; அருட்தந்தை செபாஸ்டின் மஞ்சேரிக்களம் அவர்கள். “ஒவ்வொருவரும் ஆண்டவர் அவரவருக்குப் பகிர்ந்தளித்த கொடையின்படியும் அவர் விடுத்த அழைப்பின்படியும் வாழட்டும்” என்ற புனித பவுலடியாரின் வார்த்தையை மனதில் ஏற்றவராய் தான் ஒரு குருவாக வேண்டும் என்ற ஆசையில் ஆலுவா உயர் குருமடத்தில் இணைந்தார். 1966 மார்ச் 14 ஆம் நாள் அருட்பணியாளராக திருநிலைப்படுத்தப்பட்டார். தொடர்ந்து நாலுகோடி, புனித தோமையார் ஆலயத்தின் உதவி பங்குதந்தையாக நியமனம் செய்யப்பட்டு சிறப்புடன் பணியாற்றினார். பின்னர் சங்கனாச்சேரி இளங்குருமட ஆசிரியராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றினார்.


### *கன்னியாகுமரி மறைபரப்புத்தளம் மற்றும் தக்கலை மறைமாவட்டத்தில் இறைபணி*

காலஞ்சென்ற உயர் பேராயர் மார் மாத்யூ காவுக்காட் அவர்களின் வேண்டுதலுக்கிணங்க கன்னியாகுமரி மண்ணில் மறைபரப்புபணி செய்ய 1969 ஆம் ஆண்டு நித்திரவிளை வருகை தந்தார். 1969 முதல் 1971 வரை பணியாற்றிய அருட்தந்தை அவர்கள் மேற்படிப்பு பயில அமெரிக்கா சென்றார். மீண்டும் 1973 முதல் 1981 வரை நித்திரவிளை ஜெயமாதா மறைவட்ட ஆலயத்தில் பணிசெய்தார். அக்காலகட்டத்தில் கிறிஸ்துராஜபுரம், வாறுதட்டு ஆலயங்களையும் கவனித்து வந்தார். 1973ல் வயலின்கரை புனித அந்தோனியார் ஆலய இறைசமூகத்தையும், 1979 ல் அன்னிக்கரை புனித. மத்தேயு ஆலய இறைசமூகத்தையும் உருவாக்கினார். மேலும் கிறிஸ்துராஜபுரம், கிறிஸ்து அரசர் ஆலயம் உருவாக காரணமாயிருந்தவரும் இவரே என்பது குறிப்பிடத்தக்கது. 1981 ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்று தனது தாயகமான சங்கனாச்சேரி மறைமாவட்டத்திற்கு சென்றார். காலங்கள் உருண்டோடின, அருட்தந்தையின் பணிகள் மக்களின் மனதில் அழியாத சுவடுகளாக பதியப்பட்டன.

கன்னியாகுமரி மறைபரப்புத்தளம் தக்கலை மறைமாவட்டமாக

உருவெடுத்த பிறகு மீண்டும் 1997 மேய் 28 இல் படந்தாலுமூடு, தெற்றியோடு மற்றும் அதங்கோடு ஆலய பங்குதந்தையாகவும், திரு இருதய ஆங்கில வழி பள்ளியின் தாளாளராகவும் பணியாற்றினார். இக்காலகட்டங்களில் அதாவது 1973 நவம்பர் 10 முதல் 1975 எப்ரல் 28 வரை கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் பொருளராகவும், 1997 ஜூலை 19 முதல் 2002 பிப்ரவரி 19 வரை கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றினார். 2002 பிப்ரவரி 19 மாற்றலான அருட்தந்தை இறுதியாக சங்கனாச்சேரி உயர்மறைமாவட்டம் முண்டுபாலம் புனித மரியன்னை ஆலய பங்குதந்தையாக பணிசெய்துவிட்டு இத்திதானம் அருட்தந்தையர் ஓய்வு இல்லத்தில் ஒய்வு எடுத்து வந்தார்.

“இவ்வுடலை விட்டகன்று ஆண்டவரோடு குடியிருக்கவே விரும்புகிறோம்” (2கொரி 5.8) என்ற இறைவார்தைக்கு உயிர் கொடுக்கும் விதமாக 2024 ஜனவரி 17 அன்று இறைவனால் அழைக்கப்பட்டு இவ்வுலக வாழ்வை விட்டு விண்ண வாழ்வை அடைந்தார். தந்தை நம் மண்ணை விட்டுச்சென்றாலும் அவர் செய்த இறைபணிகளும், சமூக மாற்றங்களும் என்றும் நம் மனதில் சுவடுகளாய் பதிந்து நிற்கும்.






"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

**"நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன"**
**[உரோமையர் 10:15]**

அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

### *விவிலியக் கலைவிழா தலைமைக்குழு கூட்டம்*

மறைக்கல்வியின் 2023 – 2024 ஆம் ஆண்டு விவிலியக் கலைவிழா மறைமாவட்ட தலைமைக்குழு கூட்டம் 2024 ஜனவரி 6 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லுவிளை நற்செய்தி நிலைய அலுவலகத்தில் இயக்குநர் அருட்தந்தை. அபிலாஷ் சேவியர் அவர்களின் தலைமையில் செபத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து இயக்குநர் தந்தை அவர்களால் நடைபெறவிருக்கும் விவிலியக் கலைவிழா கலைப்போட்டிகள் பற்றி அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. மேலும் கலைப்போட்டிகள் மிகச்சிறப்பாக நடைபெற மறைமாவட்ட விவிலியக் கலைவிழா தலைமைக் குழுவினரோடு கலந்தாலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் அனைத்து ஊக்குவிப்பாளர்களும் கலந்துக்கொண்டனர். மாலை 5.00 மணியளவில் செபத்துடன் இனிதே முடிவடைந்தது.

### *மறைமாவட்ட விவிலியக் கலைவிழா கலைப்போட்டிகள்*

2023 – 2024 –ஆம் ஆண்டு மறைமாவட்ட விவிலியக் கலைவிழா போட்டிகள் 2024 ஜனவரி 13 சனிக்கிழமை படந்தாலுமூடு, திரு இருதய மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. காலை; 8.30 மணிக்கு பெயர் பதிவுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. தொடர்ந்து 9.30 மணிக்கு படந்தாலுமூடு மறைவட்ட முதன்மை பணியாளர் பேரருட்தந்தை. தோமஸ் சத்தியநேசன் அவர்களின் தலைமையில் தொடக்கவிழா நடைபெற்றது. அண்ணிக்கரை மறைக்கல்வி மாணவியர்கள் இறைவணக்கப் பாடல் பாடி விவிலியம் வாசித்து செபம் செய்தனர். இயக்குநர் அருட்தந்தை. அபிலாஷ் அவர்கள் வரவேற்று உரை நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றி விவிலியக் கலைவிழாவை துவங்கி வைத்தார். ஊக்குவிப்பாளர் திரு.விஜயகுமார் அவர்கள் போட்டி விதிமுறைகளை பற்றி எடுத்துரைத்தார். 8 மறைவட்டங்களிலுள்ள மாணவர்கள் மறைவட்ட வாரியாக 8 வரிசைகளில் 8 வண்ணக் கொடிகள் ஏந்தி நின்ற காட்சி கண் கவரும் வகையில் அமைந்தது. கலைப்போட்டிகள் அனைத்தும் 8 அரங்குகளில் காலை 10.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெற்றது.

மறைவட்ட அளவிலான போட்டிகளில் முதல் இரு இடங்களைப் பெற்ற மாணவர்கள் 467 பேர் இப்போட்டிகளில் கலந்துக்கொண்டனர். இந்த வருடம் கூடுதல் சிறப்பாக தென்காசி மறைபரப்பதள மாணவர்கள் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு குருகுல முதல்வர். பேரருட்தந்தை. தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள் பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார். ஊக்குவிப்பாளர் திரு.ஜாண் பிறைட் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். இறுதியில் பாப்பரசர் கீதத்துடன் விவிலியக் கலைவிழா நிகழ்வுகள் இனிதே நிறைவுபெற்றது.

***மறைமாவட்ட விவிலியக் கலைவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற மறைக்கல்வி நிலையங்களின் தரவரிசை பட்டியல்***

| Parish | Points | Rank |
|---|---|---|
| St. Xaviers Sunday School, Varuthattu | 68 | I |
| St. Little Flower Sunday School, Manjalumoodu | 50 | II |
| St. Joseph’s Sunday School, Soosaipuram | 32 | III |

***மறைமாவட்ட விவிலியக் கலைவிழா போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்ற மறைவட்டங்களின் விபரம்***

| Forane | Points | Rank |
|---|---|---|
| Manjalumoodu Forane | 112 | I |
| Nithiravilai Forane | 109 | II |
| Soosaipuram Forane | 63 | III |
| Thu- Pilankalai Forane | 54 | IV |
| Kaliyal Forane | 42 | V |
| Padanthalumoodu Forane | 37 | VI |
| Arukany Forane | 20 | VII |



***நன்றிகள்***

2023-2024 ஆம் ஆண்டு விவிலியக் கலைவிழா எழுத்துப்போட்டிகள் மற்றும் கலைப்போட்டிகள் மறைவட்ட மற்றும் மறைமாவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகள் மிகச்சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த மறைவட்ட இயக்குநர்கள் அருட்தந்தை. லிஜோ தெக்கேல் (ஆறுகாணி மறைவட்டம்) அருட்தந்தை. ஷிஜோ ஜோஸ் (மஞ்சாலுமூடு மறைவட்டம்) அருட்தந்தை. அஜீஷ் அட்டியில் (நித்திரவிளை மறைவட்டம்) அருட்தந்தை. அஜின் C ஜோசப் (படந்தாலுமூடு மறைவட்டம்) அருட்தந்தை. எபி பூவத்துமூட்டில் (தக்கலை பிலாங்காலை மறைவட்டம்) பேரருட்தந்தை. ஆன்றணி ஜோஸ் (சூசைபுரம் மறைவட்டம்) அருட்தந்தை. லூக்கா கொல்லாம்பறம்பில் (களியல் மறைவட்டம்) மற்றும் மறைவட்ட செயலர்கள் அருட்சகோதரி. அனிதா SH, அருட்சகோதரி. அனு SH, அருட்சகோதரி. லிஸி மேத்தியு SH, அருட்சகோதரி. எல்சீனா ASMI அருட்சகோதரி. ஜோதிஸ் FCC அருட்சகோதரி. லின்ஸ் SABS அருட்சகோதரி. வளனரசி SDS அவர்களுக்கும் அனைத்து பங்கு தந்தையர்களுக்கும், ஊக்குவிப்பாளர்களுக்கும், தலைமையாசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

மேலும் தென்காசி மறைபரப்புதள மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை. பிறின்ஸ் அவர்களுக்கும் தென்காசி மறைத்தள ஒருங்கிணைப்பாளர். பேரருட்தந்தை. டென்சி முண்டுநடைக்கல் மற்றும் அனைத்து பங்கு தந்தையர்களுக்கும், தலைமையாசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

***ஆசிரியர்களுக்கான மறைவட்ட விவிலியக் கலைவிழா கலைப்போட்டிகள்***

மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான விவிலியக் கலைவிழா போட்டிகள் 2024 ஜனவரி 26 வெள்ளிக்கிழமை படந்தாலுமூடு, திரு இருதய மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. காலை 9.00 மணிக்கு பெயர் பதிவும் தொடர்ந்து 9.30 மணியளவில் தூய ஆவிப்பாடலுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. இயக்குநர் அருட்தந்தை. அபிலாஷ் அவர்கள் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். ஊக்குவிப்பாளர் திரு.விஜயகுமார் அவர்கள் போட்டி விதிமுறைகளை பற்றி எடுத்துரைத்தார். தொடர்ந்து கலைப்போட்டிகள் அனைத்தும் 3 அரங்குகளில் காலை 10.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெற்றது. காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை மஞ்சாலுமூடு, நித்திரவிளை மற்றும் படந்தாலுமூடு மறைவட்டங்களுக்கும் மதியம் 1.00 மணிக்கு மறை மாவட்ட அளவில் விவிலிய வினாடி வினாப்போட்டியும் பிற்பகல் 1.30 மணி முதல் 5.30 மணி வரை ஆறுகாணி, தக்கலை - பிலாங்காலை, சூசைபுரம் மற்றும் களியல் மறைவட்டங்களுக்கும் போட்டிகள் நடைபெற்றது.

இப்போட்டிகளில் 7 மறைவட்டங்களிலுமாக 321 ஆசிரியர்கள் பங்கு பெற்றனர். மறை மாவட்ட அளவில் நடைபெற்ற விவிலிய வினாடி வினாப்போட்டில் 51 ஆசிரியர்கள் பங்கு பெற்றனர். நிறைவு விழாவில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கு இயக்குநர் அருட்தந்தை. அபிலாஷ் அவர்களும் படந்தாலுமூடு மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை. அஜின் C ஜோசப் அவர்களும் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.



**ஆசிரியர்களுக்கான விவிலியக் கலைவிழா போட்டிகளில் மறைவட்ட அளவில் வெற்றி பெற்ற மறைக்கல்வி நிலையங்களின் தரவரிசை பட்டியல்**

| Parish | Points | Rank |
|---|---|---|
| **Arukany Forane** | | |
| Holy Famuily Sunday School, Arukany | 23 | I |
| St.Mary's Sunday School, Penuthadam | 12 | II |
| St. Thomas Sunday School, Pathukany | 7 | III |
| **Manjalumoodu Forane** | | |
| Holy Famuily Sunday School, Mukkuttukal | 22 | I |
| St.Thomas Sunday School, Muzhucode | 16 | II |
| St. Little Flower Sunday School, Manjalumoodu | 8 | III |
| **Nithiravilai Forane** | | |
| St. George Sunday School, Munchirai | 17 | I |
| Jaya Matha Sunday School, Nithiravilai | 15 | II |
| Amala Maria Sunday School, Cheenivilai | 7 | III |
| **Padanthalumoodu Forane** | | |
| St. Thomas Sunday School, Palukal | 18 | I |
| St.Mathew Sunday School, Annikkarai | 15 | II |

| | | |
|---|---|---|
| St. Pauls Sunday School, Thettiyode | 7 | III |
| **Thuckalay Pilankalai Forane** | | |
| St. Little flower Sunday School, Pilankalai | 22 | I |
| Christ the King Sunday School, Paraicode | 13 | II |
| St. Micheals Sunday School, Kattathurai | 9 | III |
| **Soosaipuram Forane** | | |
| Deva Matha Sunday School, Killiyoor | 20 | I |
| St.Joseph Sunday School, Soosaipuram | 16 | II |
| Christ The King Sunday School, Palappallam | 8 | III |
| **Kaliyal Forane** | | |
| St. Mary's Sunday School, Kaliyal | 20 | 1 |
| St.Thomas Sunday School, Marappady | 12 | II |
| Sacred Heart Sunday School, Pallikkonam | 8 | III |
| St.Joseph Sunday School, Karode | | |

அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்ற
இணை இயக்குநர்

அருட்தந்தை அபிலாஷ் சேவியர்
இயக்குநர்

| FEASTDAYS OF REV. FATHERS - FEBRUARY 2024 | |
|---|---|
| Fr. Johnsilal Arackaparampil | 03 |
| Fr. Sanil Panthichirackal | 03 |
| Fr. Davis Karukappally CMI | 20 |
| Fr. Joshy Thevalakkara CMI | 20 |
| Fr. Justin Cheruvelil | 20 |
| Fr. Mijo Puthenpurayil | 20 |
| Fr. Robin Koorumullil | 20 |
| Fr. Sebastian Pothemparampil MST | 20 |
| Fr. Seby Manimalakandathil | 20 |
| Fr. Shijo Jose Aikkarakunnel | 20 |

சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

### *பொங்கல் கொண்டாட்டம்*

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் பொங்கல்விழா கொண்டாட்டம் 2024 ஜனவரி 15 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் களியல் மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜெஸ்டின் சுதீஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சேனங்கோடு புனித லூர்து அன்னை ஆலய SMYM உறுப்பினர்கள் இறைவணக்கம் பாடினர். தொடர்ந்து மறைமாவட்ட துணைச் செயலாளர் அபிஷா அனைவரையும் வரவேற்று பேசினார். தெற்றியோடு SMYM உறுப்பினர் ஜெசின் தொடக்கவுரை வழங்கினார். அருட்தந்தை ஜெஸ்டின் சுதீஷ் அவர்கள் சுய மதிப்பீடு பற்றி வகுப்புகள் நடத்தினர். தொடர்ந்து மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டு சிறு விளையாட்டுக்கள் மற்றும் நடனம் போன்றவை நடத்தப்பட்டன. ஏற்கனவே கொடுத்திருந்த குழுக்கள் அடிப்படையில் தனித்தனியாக பொங்கல் வைத்தல் போட்டிகள் மற்றும் கொண்டாட்டம் நடைபெற்றது. தொடர்ந்து சமத்துவ விருந்து நடைபெற்றது. மதியம் 2 மணி அளவில் வடம் இழுத்தல், கரும்பு தின்னுதல் மற்றும் பல போட்டிகள் நடைபெற்றது. இறுதியாக மறைமாவட்ட ஆலோசகர் மெரின் சுஜித் அனைவருக்கும் நன்றி கூறினார். நிகழ்ச்சிகளை மறைமாவட்ட தலைவர் மனோஜ் தொகுத்து வழங்கினார். அனைத்து ஏற்பாடுகளையும் நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் சிறப்பாக முறையில் ஒருங்கிணைத்திருந்தனர். இதில் 46 இளையோர்கள் கலந்து கொண்டனர்.

### *ஒருநாள் புகைப்பட பயிற்சி முகாம்*

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் சார்பாக ஒருநாள் பயிற்சி முகாம் 2024 ஜனவரி 25 அன்று நித்திரவிளை ஜெயமாதா மறைவட்ட



ஆலய வளாகத்தில் நடைபெற்றது. காலை 10 மணியளவில் பெயர் பதிவுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. மறைமாவட்ட தலைவர் மனோஜ் அனைவரையும் வரவேற்று பேசினார். SMYM மறைமாவட்ட ஆலோசகர் மெரின் சுஜித் ஊடகம் பற்றி தொடக்கவுரை வழங்கினார். தெற்றியோடு SMYM உறுப்பினர் ஜெசின் குறும்படங்கள் எடுப்பது பற்றி வகுப்புகள் நடத்தினார். SMYM மறைமாவட்ட பொருளர் அஜித் புகைப்படம் எடுப்பதற்கான விதிமுறைகள் பற்றி தெளிவாக விளக்கி கூறினார். தொடர்ந்து பெறப்பட்ட கருத்துக்கள் அடிப்படையில் புதிய குறும்படம் தயாரிக்கப்பட்டது. நித்திரவிளை மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோமி கமுகுமற்றத்தில் நிகழ்வுக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்.

***அலகு சந்திப்பு***

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் தற்போது பங்களவில் நடைபெறும் அலகுகளை பார்வையிட்டு வருகின்றனர். ஞாயிற்றுகிழமைகளில் அந்தந்த பங்குகளில் திருப்பலியில் பங்கேற்று அலகு சந்திப்பு நடைபெற்று வருகிறது. 07.01.2024 அன்று சேனங்கோடு மற்றும் காரோடு ஆலயத்திலும், 28.01.2024 அன்று வயலிங்கரை மற்றும் முஞ்சிறை ஆலயத்திலும் நடைபெற்றது.



**இவண்**
**அகில், செயலர்**

Ongoing Priestly Formation & Presentation of Annual Report by Departments & Pious Associations

**Place: Sangamam**
**Dates: 13-14 February 2024**
**Time: 09.30 am – 04.00 pm**

# இல்வாழ்வு இயக்கம்
## தக்கலை மறைமாவட்டம்



### சீனாய் மறுவாழ்வு மையம்

2024 ஜனவரி 15 ம் தேதி மருத்துவர் றாபின் அவர்கள் வருகை தந்திருந்தார். மது நோய் மற்றும் மனநோயாளியை சந்தித்து அவர்களுக்கு மருந்து மற்றும் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டது.. இதில் 23 நோயாளிகள் பயன் அடைந்தார்கள்.

அருட்தந்தை மற்றும் அருட்கன்னியர்கள் வாரந்தோறும் திங்கள் முதல் வியாழன் வரை கவுன்சிலிங் நடைபெற்று வருகிறது. கடந்த மாதம் 12 பேர் இதனால் பயன் பெற்றுள்ளனர்.

### திருமண ஆயத்தப் பயிற்சி

திருமணத்திற்கு தயாராகும் இளையோருக்கு திருமண வாழ்க்கைக்கு தேவையான ஆலோசனையும், வழிகாட்டுதலும் இல்வாழ்வு இயக்கம் வழங்கி வருகிறது. திருமண ஆயத்தப் பயிற்சி நடத்தும் அருட்தந்தையர்கள் மற்றும் ஆசிரியர்கள் விவரம்

1. Fr. Martin - Importance of Communication in marriage and Family Life .
2. Rev. Sr. Blessy - Psychology of Men and Women and also Importance of Psychology in Family Life.
3. Rev.Dr. Joshy - Canon law
4. Mr. John - Historical Background of Marriage and family
5. Rev. Dr. Jimmy - Theology of Marriage and Family, Main Documents of the church. Biblical Version Family Apostolate
6. Rev. Dr. Justin - Liturgical Aspects of Marriage Life
7. Mr. Philip - Sexuality and Morality
8. Dr. Betty - Gynecological issues and Remedies with check up

9. Mr. Vensleaus - Experience of Christian Marriage and family and also Preparation of Confession
10. Mrs.Rajapushpam - Importantance of Marriage in Todays life.

திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பில் ஜனவரி மாதம் 20 இளையோர்கள் பயிற்சிப் பெற்றுள்ளனர்.



***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***
***இயக்குநர்***

# வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| அருட்தந்தை பிலிப் கொடியந்தற அவர்களின் 11-ம் ஆண்டு நினைவு தினம் | – பிப்ரவரி 09 |
| உலக நோயாளர் தினம் | – பிப்ரவரி 11 |
| சாம்பல் திங்கள் | – பிப்ரவரி 12 |
| அருட்தந்தையர்களுக்கான உருவாக்கல் பயிற்சி | – பிப்ரவரி 13 |
| மறைமாவட்ட துறைகளுக்கிடையேயான கூட்டம் | – பிப்ரவரி 14 |
| அருட்தந்தை செபாஸ்டின் மஞ்சேரிக்களம் அவர்களின் 41-ம் நாள் நினைவு தினம் | – பிப்ரவரி 26 |
| அருட்தந்தையர் பேரவை | – பிப்ரவரி 27 |




# வின்சென்ட்- தே-பவுல் சபை

***சுழற்சித் திட்டம் வழங்குதல்***

நித்திரவிளை ஜெய மாதா ஆலயத்தில் செயல்படும் ஜெய மாதா கிளைசபை சார்பில் 14.01.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி அளவில் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டப்பாடம் அவர்கள் தலைமையில் திட்டம் வழங்குதல் நடைபெற்றது. ஆடு வளர்த்தல் மற்றும் விறகு விற்பனை செய்தல் போன்றவற்றிற்காக சுழற்சி கடனுதவி திட்டம் மூலம் 6 நபர்களுக்கு தல பத்தாயிரம் விதம் ரூபாய் 60 ஆயிரம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் வட்டார சபை தலைவர் சகோதரர். ஜெயலால் அவர்களும் மத்திய சபை விரிவாக்க அலுவலர் சகோதரர் கிறிஸ்துதாஸ் அவர்களும் உடனிருந்தனர். மத்திய சபை திட்ட அலுவலர் சகோதரர் எட்வின்சன் கோப்புகளை ஆய்வு செய்து தேவையான ஆலோசனைகளை வழங்கினார். மகளிர் கிளை சபை சார்பிலும் திட்டத்தொகை வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகளை கிளைச்சபை தலைவர்கள் சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

***சகோ. D.Pஷாஜி,***
***தகவல் தொடர்பு அலுவலர்***

---

# அருட்சகோதரர்களிடமிருந்து

அருட்சகோதரர்கள் அனைவரும் நலமாக உள்ளனர். ஜனவரி 2 ஆம் தேதி குருவாக அருட்பொழிவு பெற்ற அருட்தந்தை லிஜு அவர்களுக்கு அருட்சகோதரர்கள் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களும் பாராட்டுகளும்.

வடவாதூர் புனித தோமையார் உயர் குருத்துவ கல்லூரியில் ஜனவரி மாதம் 15 ஆம் தேதி பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. ஜனவரி மாதம் சீரோ மலபார் திருச்சபையின் உயர்ப்பேராயர் மார் ராபேல் தட்டில் அவர்கள் அனைத்து உயர் குருத்துவ கல்லூரிகளையும் பார்வையிட்டு அனைத்து குருமாணவர்களையும் சந்தித்தார். திருத்தொண்டார்கள் அனைவரும் தங்கள் திருத்தொண்டு தளங்களில் நன்முறையில் பணி செய்கின்றனர். எங்களுக்காக ஜெபிக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி. தொடர்ந்தும் எங்களுக்காக வேண்டுங்கள்.

***சகோ. சுனில் ஆன்றணி***

# தக்கலை இளையோர் கல்வி பணியகம்
## Thuckalay Youth Educational Services
in Collaboration with Trichy Don Bosco Vazhikatti

***பள்ளி மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்சி***

மாத்திரவிளை, புனித ஜோசப் உயர்நிலைப் பள்ளியில் 6 ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்சி வகுப்பானது 11.01.2024 வியாழக்கிழமை காலை 10 முதல் 1 மணி வரை நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழுவின் இயக்குநர் அருட்தந்தை அஜின் C ஜோசப் அவர்கள் ஊடக அடிமைத்தனத்திலிருந்து எவ்வாறு மீள்வது என்றும், இலக்கு நிர்ணயித்தல் மற்றும் சுய மதிப்பீடு போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் வகுப்புகளை நடத்தினார். TYES தன்னார்வலர் மெரின்சுஜித் அவர்கள் பாடங்களை படிக்கும் முறை மற்றும் படித்த பாடங்களை எவ்வாறு நினைவில் கொள்வது போன்ற வழிமுறைகளை எடுத்து கூறினார். இதில் 100 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இந்த பயிற்சி வகுப்பிற்கு தேவையான ஏற்பாடுகளை பள்ளி நிர்வாகம் நல்ல முறையில் செய்திருந்தது.



***மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கான பயிற்சி***


தெற்றியோடு, புனித பவுல் ஆலய மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கான கருத்தரங்கு 2024 ஜனவரி 21 ஞாயிற்றுக்கிழமை மதியம் 3.00 மணி முதல் 5.00 மணி வரை ஆலய வளாகத்தில் நடைபெற்றது. தக்கலை இளையோர் கல்வி சேவையின் தன்னார்வலர் மனோஜ் அவர்களால் வழிநடத்தப்பட்டது. இன்றைய சமுதாயத்தில் குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கான உறவு, குடும்பம் மற்றும் தாய்மார்களின் செயல்பாடுகள் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் நல்ல முறையில் நடைபெற்றது. இதில் 20க்கும் மேற்பட்ட தாய்மார்கள் பங்குகொண்டனர். தக்கலை கல்வி சேவை பணியகம் இயக்குநர் அருட்தந்தை. ஜோசப் சந்தோஷ் அவர்கள் வழிகாட்டுதலின் கீழ் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

**ஜெசிலா மேரி,**
**ஒருங்கிணைப்பாளர்**

# தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு

2024 ஜனவரி 07 அன்று நித்திரைவிளை ஜெயமாதா மறைவட்ட ஆலயத்தில் மகளிருக்கான இதயம் காப்போம் விழிப்புணர்வு கருத்துரை நடைபெற்றது. அருட்சகோதரி சாஜிதா ASMI அவர்கள் கருத்துரை வழங்கினார்கள். சுமார் 80 மகளிர் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

2024 ஜனவரி 12 அன்று காட்டாத்துறை, புனித மிக்கேல் அதிதூதர் பள்ளிக்கூடத்தில் இதயம் காப்போம் விழிப்புணர்வு வகுப்புகள் நடைபெற்றது. மருத்துவர் அஜிக்குமார் மற்றும் மருத்துவர் ரெம்யா BSMS அவர்களின் கருத்துப் பகிர்வுக்குப்பின் இலவச மருத்துவமுகாம் மற்றும் விழிப்புணர்வு பேரணியும் நடைபெற்றது. சுமார் 500 மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர். பள்ளி நிர்வாகம் நிகழ்வுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்திருந்தது.



2024 பிப்ரவரி 11 ஞாயிற்றுக்கிழமை, உலக நோயாளிகள் தினம் கொண்டாடப்படுகிறது. ஆலயங்களில் சிறப்பு செபங்களை ஏறெடுக்கவும், நோய்வாய்ப்பட்டவர்களை சந்தித்து அவர்களுக்கு தேவையான ஆலோசனை வழங்கவும் திருத்தந்தை நமக்கு அழைப்பு விடுக்கிறார்.

***அருட்சகோதரி. டயானா SDS***
***செயலர்***

# கன்னியாகுமரி
# சமூக சேவை சங்கம்

***பொங்கல் விழா***

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் பொங்கல் விழா, ஜனவரி 16 தேதி செவ்வாய்கிழமை கொண்டாடப்பட்டது. KKSSS இயக்குநர் அருட்தந்தை. தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் Educare மாணவர்கள் மற்றும் அலுவலகப்பணியாளர்கள் கலந்து கொண்டனர். விழா முடிவில் அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது.

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சுய உதவி குழுக்கள் சார்பாக பொங்கல் விழா பல்வேறு மையங்களில் நடைபெற்றது. ஜனவரி 14 ஆம் தேதி தெற்றியோடு மையத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் KKSSS துணை இயக்குநர் அருட்தந்தை அஜின்.C அவர்கள் தலைமை தாங்கினார். ஜனவரி 15 தேதி வாறுதட்டு மற்றும் நித்திரவிளை மையத்திலும் ஜனவரி 16 தேதி பள்ளிக்கோணம் மையத்திலும் நடைபெற்றது. நிகழ்வில் வண்ண கோலமிட்டு புதுப்பானையில் பொங்கல் வைத்து, கலைப்போட்டிகளுடன் கொண்டாடப்பட்டது. இறுதியாக இனிப்புகள் பரிசுப்பொருட்கள் வழங்கி பொங்கல் வாழ்த்துகளை பகிர்ந்து கொண்டனர்



***KKSSS பாதுகாவலர் தினம்***

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் பாதுகாவலர் புனித தேவசகயம் பிள்ளை தினக் கொண்டாட்டம் 2024 ஜனவரி 20 சனிக்கிழமை அன்று கல்லுவிளை, KKSSS அரங்கத்தில் நடைபெற்றது. KKSSS இயக்குநர் அருட்தந்தை. தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் துவக்கவுரையாற்றினார். தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வரும் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் தலைவருமாகிய பேரருட்தந்தை. தோமஸ் பவ்வத்துபறம்பில் அவர்கள் தலைமை தாங்கினார்.

திருவிதாங்கோடு அரைப்பள்ளி மேலாளர் தந்தை பர்சிலீபி ரம்பான் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். தமிழ்நாடு சமூக பணி மைய இயக்குநர் அருட்தந்தை சேசுதாஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். நிகழ்வில் Educare முதல் அலகு மாணவர்களுக்கு கல்வி நிதியுதவி திட்டத்தை துவங்கி வைத்தார். தொடர்ந்து கனவு இல்லம் திட்டம் வழியாக சீனிவிளை பகுதியை சார்ந்த ஜார்ஜ் என்பவருக்கு வழங்கப்பட்டது. நிகழ்வின் இடையிடையே கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்வில் மறைமாவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், ஆலோசனை குழு உறுப்பினர்கள், மற்றும் அலுவலகப்பணியாளர்கள், களப்பணியாளர்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்



***CTWWC Training***

MEAL-2 திட்டத்தின் இந்த வருடத்தின் திட்டமிடல் பயிற்சி வகுப்புகள் ஜனவரி 17 முதல் 19 வரை கல்லுவிளை KKSSS அரங்கத்தில் நடைபெற்றது. நிகழ்வுகளை கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை. தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமையுரையாற்றி தொடங்கி வைத்தார். CRS திட்ட அலுவலர் திருமதி. சஞ்சனா, இணைத் திட்ட அலுவலர் திரு மனோரஞ்சன் மற்றும் TASSOS திட்ட அலுவலர் திரு.ஜேரோம் ஆகியோர் பயிற்சிகளை வழிநடத்தினர். முதல் நாள் CTWWC திட்டத்தின் ஒரு வருடத்தின் செயல்பாடுகள் பற்றி விவாதிக்கப்பட்டது. இரண்டாம் நாள் பயிற்சியில் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்துவது பற்றி பல்வேறு வகைகளில் விளக்கப்பட்டது. இறுதி நாளில் CTWWC திட்டத்தின் C4D கருவி மற்றும் ICT4D கருவி பயன்படுத்தல் பற்றி பயிற்சி அளித்தனர். இதில் 4 மறைமாவட்டங்களிலிருந்து 39 நபர்கள் கலந்து கொண்டனர். KKSSS சார்பில் இயக்குநர் உட்பட திட்ட பணியாளர்கள் 9 பேர் கலந்து கொண்டனர்.

***அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்***

***செயலர்***

# புலரி சமூக சேவை சங்கம்
## தென்காசி மறைபரப்புதளம்

**பொங்கல் விழா மற்றும் கோலப்போட்டி**

புலரி சமூக சேவை மையத்தின் சார்பாக தமிழர்களின் விழாவான பொங்கல் திருவிழா 14.1.2024 அன்று நடைபெற்றது. விழாவில் மகளிர் சுய உதவி குழுவினர் மற்றும் தையல் பயிற்சி மாணவியர் திரளாக கலந்து கொண்டு பொங்கலிட்டு மகிழ்ந்தனர். நிகழ்வின் துவக்கத்தில் புலரி இயக்குனர் அருட்பணி மகேஷ் அவர்கள் அனைவரையும் வரவேற்றதோடு தமிழர்களின் பண்பாட்டு செழுமையையும், அறவாழ்வின் மேன்மையையும் குறித்து வகுப்பு நடத்தினார். பின்னர் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு குழுவாரியாக கோலப்போட்டி நடத்தப்பட்டது. நடைபெற்ற கோலப் போட்டியில் முதல் பரிசு ரூபாய் 1000 ஸ்ரீ ஓம் சக்தி குழுவினரும் இரண்டாவது பரிசு ரூபாய் 750 இந்திரா குழுவினரும் மூன்றாவது பரிசு ரூபாய் 500 குறிஞ்சி குழுவினரும் பெற்றனர். போட்டியில் 12 குழுக்கள் கலந்து கொண்டு தங்கள் திறமையை வெளிக்காட்டினர். பின்னர் நடைபெற்ற விழாவில் சிறப்பு விருந்தினராக மேக்கரை புனித ஜார்ஜியார் ஆலய பங்குத்தந்தை அருட்பணி. ஜாண் ஜோசப் அடிகளார் மற்றும் ஆசிரியர் திருமதி. விஜி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அருட்சகோதரி. அல்போன்சா FCC திருமதி. மரிய செல்வம், திருமதி. கலா தேவி ஆகியோர் நிகழ்வை முன்னின்று நடத்தினர்.



**ஆங்கிலப் பயிற்சி**

மாணவ மாணவியரின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தும் நோக்கில் புலரி சமூக சேவை மையம் வாரம் தோறும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை மாணவ மாணவிகளுக்கு ஆங்கிலப் பயிற்சியை நடத்துகிறது. இப்பயிற்சியை ஆங்கில ஆசிரியை திருமதி.றீட்டா அவர்கள் வழிநடத்தி வருகிறார்.

***செய்தியாளர்***
***திருமதி.அனு கிறிஸ்டி***

# புனித மரியன்னை இளங்குருமடம் முக்கூட்டுகல்

முக்கூட்டுகல் புனித மரியன்னை இளம்குருமட வெள்ளிவிழாவையொட்டி 20.01.2024 அன்று அருள்சகோதரர்களின் நாடகம் நடைபெற்றது. இதில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பாலர் பவனில் பயிலும் மாணவர்கள் வருகை புரிந்தனர்.

புனித மரியன்னை இளம் குருமடத்தில் புதுப்பிக்கப்பட்ட ஆலய மந்திரிப்பு 24.01.2024 அன்று மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மறைமாவட்ட அருட்தந்தையர்கள், SH சபை அருட்கன்னியர்கள் என ஏராளமானோர் கலந்துக் கொண்டனர்.



முக்கூட்டுக்கல், புனித மரியன்னை இளங்குருமடத்தின் வெள்ளிவிழா கொண்டாட்டம் 2024 ஜனவரி 27 சனிக்கிழமை மாலை 3.30 மணியளவில் நடைபெற்றது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் திருப்பலிக்கு தலைமை தாங்கினார். முன்னாள் அதிபர் அருட்தந்தை டோம் குன்னும்புறம் அவர்கள் திருப்பலி மறையுரை வழங்கினார். தொடர்ந்து பொதுக்கூட்ட நிகழ்வுகள் நடைபெற்றது. மேதகு ஆயர் அவர்கள் தலைமையுரை வழங்கினார். குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில், பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அருட்சகோதரி டீசா மரியா SH, திரு வில்சன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இளங்குருமட அருட்சகோதரர்கள் கலைநிகழ்வுகளை ஒருங்கிணைத்திருந்தனர். விழா ஏற்பாடுகளை இளங்குருமட அதிபர் அருட்தந்தை ஐசக் புன்னூர் CMI தலைமையிலான அருட்தந்தையர் மற்றும் அருட்சகோதரர்கள் சிறப்பாக செய்யப்பட்டிருந்தனர்.

# மறைமாவட்டச் செய்திகள்

## குருத்துவ அருட்பொழிவு

தக்கலை மறைமாவட்டத்தில் புதிய அருட்தந்தையாக திருத்தொண்டர் லிஜூ மாரட்டுகளம் அவர்கள் 2024 ஜனவரி 2 அன்று செத்திப்புழா, திரு இருதய ஆலயத்தில் வைத்து அருட்பொழிவுச் செய்யப்பட்டார். தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் நிகழ்வுகளுக்கு தலைமை தாங்கினார். அருட்தந்தை மேத்யூ ஆரக்களம் CMI அவர்கள் மறையுரை வழங்கினார். தக்கலை மறைமாவட்டத்தைச் சார்ந்த எராளமான அருட்தந்தையர்கள் மற்றும் அருட்கன்னியர்கள் இதில் கலந்து கொண்டனர்.

## புத்தாண்டு மற்றும் தெனகா கொண்டாட்டம்

தேனி மறைபரப்புதள தெனகா கொண்டாட்டம் 2024 ஜனவரி 05 அன்று கம்பம் அங்கூர்பாளையத்தில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாலை 5.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமானது. ஆயர் தலைமையில் ஆடம்பரத்திருப்பலியும் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் நடைபெற்றது. அனைத்து ஏற்பாடுகளையும் அருட்தந்தை பென்னிதட்டாம்பறம்பில் அவர்கள் சிறப்பாகச் செய்திருந்தார்.

## அருட்தந்தையர்களுக்கான கூட்டம்

மறைமாவட்ட அருட்தந்தையர்களுக்கான கூட்டம் 2024 ஜனவரி 16 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் ஆரம்பமானது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமை தாங்கினார். புதிய அருட்தந்தை லிஜூ மாரட்டுகளம் அவர்களுக்கு வரவேற்பு வழங்கப்பட்டது. சாந்தா மறைமாவட்ட ஆயர் மார் எப்ரேம் நெரிக்குளம் அவர்கள் கலந்து கொணடு திருத்தொண்டு அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். புதிய அருட்தந்தையர் பேரவை உறுப்பினர்களுக்கான தேர்தல் நடைபெற்றது.

## அருட்தந்தையர் பேரவை உறுப்பினர்கள்

**கூரியா உறுப்பினர்கள்** : பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில், அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல், அருட்தந்தை ஜோன்சிலால் அரக்கப்பறம்பில், அருட்தந்தை தோமஸ் சத்தியநேசன்

**தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்** : பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், அருட்தந்தை ஜியோ சூழிக்குன்னேல், அருட்தந்தை றோபின் கூறுமுள்ளில், அருட்தந்தை டென்சி முண்டுநடக்கல், அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ், அருட்தந்தை

அபி பூவத்துமூட்டில், அருட்தந்தை வினு D ஜோசப், அருட்தந்தை சுபின் புத்தன்புரக்கல், அருட்தந்தை மார்ட்டின் கண்டம்பரம்பில் MST, அருட்தந்தை சந்தோஷ் கையாலபரம்பில் CMI.

**பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்கள்** : அருட்தந்தை ஆண்டனி ஜோஸ், அருட்தந்தை ஜோசப் சந்தோஷ், அருட்தந்தை சாஜன் நெட்டபொங்கு. மறைமாவட்ட ஆயர் அவர்கள் உட்பட 18 பேர் அருட்தந்தையர் பேரவையின் உறுப்பினர்களாக செயல்படுவர்.

### ▶ தமிழ்நாடு ஆயர் பேரவை

தமிழக ஆயர் பேரவையின் அரை வருட கூட்டமானது 2024 ஜனவரி 23 மற்றும் 24 ஆகிய நாட்களில் பாண்டிச்சேரி உயர் மறைமாவட்டத்தில் நடைபெற்றது. ஆயர் பேரவையின் நலவாழ்வு பணிக்குழு நிகழ்வுகளுக்கு வாழ்த்துக்கள் கூறப்பட்டது. புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கும்பகோணம் மற்றும் குழித்துறை மறைமாவட்ட ஆயர்களுக்கும் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது.

### ▶ தோன் போஸ்கோ தினம் கொண்டாட்டம்

இளையோர்களின் தந்தை என அழைக்கப்படும் புனித தோன்போஸ்கோ திருவிழா 2024 ஜனவரி 30 அன்று தக்கலை ஆயர் இல்லத்தில் கொண்டாடப்பட்டது. அருட்சகோதர்கள் அபிஷ்வின் மற்றும் ஜோஸ் சுஜின் ஆகியோர் தொடக்க செபம் செய்தனர். பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் வரவேற்புரை வழங்கினார். ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையுரை வழங்கினார். CMC அருட்சகோதரிகளால் வாழ்த்துப்பாடல் பாடப்பட்டது. அருட்சகோதரி சீலியா FCC அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அருட்தந்தை மைக்கேல் ஆரோக்கியசாமி SDB அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றது. மறைவட்ட முதன்மை பணியாளர்கள், பிலாங்காலை மறைவட்ட அருட்தந்தையர்கள் ஆயர் இல்ல அயலார்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### ▶ ஜோதி நிலையம் வெள்ளிவிழா கொண்டாட்டம்

பாலப்பள்ளம் ஜோதி நிலைய வெள்ளிவிழா கொண்டாட்டம் 2024 ஜனவரி 30 மாலை 5.30 மணியளவில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர்களாக கன்னியாகுமரி மாவட்ட மாற்றுதிறனாளிகள் நல அலுவலர் திரு. சங்கரன் மற்றும் SABS துறவறசபை பொது கவுன்சிலர் அருட்சகோதரி ஆன்சி மாலிப்பறம்பில் SABS ஆகியோர் பங்கேற்றனர். அருட்தந்தை அஜின் ஜோஸ், அருட்சகோதரி றோஸ் மார்டின் SABS, திரு பிஜூ மோன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## இதர செய்திகள்

- அருட்தந்தை லிஜு மாரட்டுகளம் அவர்கள் மறைபரப்புதள பொருளராகவும், ஆயரின் தனிப்பட்ட செயலராகவும், ஆவணகாப்பாளருக்கு உதவியாகவும் 2024 ஜனவரி 20 முதல் தொடர்ந்து செயல்படுவார்.
- 2024 ஜனவரி 6 முதல் 12 வரை சீரோ மலபார் திருத்தொண்டு வாரம் மறைமாவட்டத்தில் கொண்டாடப்பட்டது.
- சாகர் மறைமாவட்ட ஆயர் மார் ஜேம்ஸ் அத்திகளம் MST அவர்கள் 2024 ஜனவரி 18 அன்று தக்கலை மறைமாவட்டத்திற்கு வருகை புரிந்தார்.
- கிறிஸ்தவ ஒன்றிப்பு தின கொண்டாட்டம் 2024 ஜனவரி 21 ஞாயிற்றுக்கிழமை அனைத்து ஆலயங்களிலும் நடைபெற்றது.
- அருட்தந்தை ஜாண் தெக்கேல் அவர்களின் 41 வது நினைவுத்திருப்பலி 2024 ஜனவரி 30 அன்று மேழக்கோடு புனித பிரான்சிஸ் அசிசி ஆலய வளாகத்தில் நடைபெற்றது.
- இராமநாதபுரம் மறைமாவட்டத்திலிருந்து அருட்பணிக்காக ஏழு திருத்தொண்டர்கள் நமது மறைமாவட்டத்திற்கு வருகை தரவுள்ளனர் பிப்ரவரி 2024 6 முதல் 25 வரை மறைமாவட்ட ஆலயங்கள் மற்றும் மறைபரப்பு பகுதிகளில் இறைபணி செய்வார்கள்

---

## தென்காசி மறைத்தள செய்திகள்

தெனகா திருநாள் அனைத்து ஆலயங்களிலும் 2024 ஜனவரி 06 அன்று ஒளியேற்றி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பொங்கல் திருநாள் அனைத்து ஆலயங்களிலும் சிறப்பாக அனுசரிக்கப்பட்டது.

புலரி மெட்ரிகுலேஷன் பள்ளியின் 19 ஆவது ஆண்டு விழா 2024 ஜனவரி 23 ஆம் தேதி சிறப்பாக கொண்டாடப்பட்டது. செயின்ட் ஜோசப் CBSE பள்ளி கூட ஆண்டு விழா ஜனவரி மாதம் 27 ஆம் தேதி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

### மாதர் ஜோதிஸ் இயக்கம்

மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு ஜனவரி மாதம் 28 ஆம் தேதி தென்காசி பார்டரில் வைத்து நடத்தப்பட்டது. தென்காசி மறைபரப்புதள மாதர் ஜோதிஸ் இயக்குநர் அருட்தந்தை ஆன்றணி மகேஷ் அவர்கள் வகுப்புகள் நடத்தினார். தாய்மார்கள் இதில் பங்கெடுத்து பயனடைந்தனர்.

***அருட்சகோதரி. லிபியா CMC***

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### திரு இருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு

2024 ஜனவரி 01 அன்று கிறிஸ்து யூபிலி துவக்க விழாவானது திருப்பலிக்கு இடையே பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்களால் மெழுகுவர்த்தி ஏற்றி துவங்கப்பட்டது.

14.01.2024 ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின் இளையோர்கள் தலைமையில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. பங்குமக்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

### புனித பவுல் ஆலயம் – தெற்றியோடு

2024 ஜனவரி 14 அன்று பொங்கல் விழா கொண்டாட்டங்கள் மாதர் ஜோதிஸ் தாய்மார்கள் தலைமையில் நடைபெற்றது. மேலும் இளையோர் இயக்கம் சார்பாக மறைக்கல்வி மாணவர்களுக்கு சிறப்பு விளையாட்டுகள் நடத்தப்பட்டது. உறவியங்களுக்கிடையான கோலப்போட்டியும் நடைபெற்றது.



2024 ஜனவரி 28 அன்று மதியம் 2.00 மணியளவில் மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கான அரை நாள் கருத்தரங்கு ஆலய வளாகத்தில் நடைபெற்றது. தக்கலை இளையோர் கல்வி பணியக தன்னார்வலர்கள் நிகழ்வுகளை வழிநடத்தினர்.

### புனித மரிய கொரற்றி ஆலயம் – அதங்கோடு



தமிழர் திருநாளாம் பொங்கல் விழா 2024 ஜனவரி 15 அன்று காலை 6.30 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமானது. தொடர்ந்து பங்குத்தந்தை அருட்தந்தை கொச்சுமோன் அவர்கள் ஒளி ஏற்றி வைக்க, இளையோர்கள் தலைமையில் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது.

## மஞ்சாலுமூடு

- **புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – மஞ்சாலுமூடு**

காரோடு தேவசகாயம் நல்வாழ்வு நிலையத்தில் இளையோர் இயக்கம் சார்பாக 01-01-2024 அன்று அங்குள்ள நோயாளிகளுக்கு உடைகள் வழங்கப்பட்டது.



புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலய உதவி பங்குதந்தை அருட்தந்தை மிஜோ அவர்களின் பெயர் கொண்டவிழா 2024 ஜனவரி 21 ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின் கொண்டாடப்பட்டது.

தோலடி காருண்யா மனநல காப்பகத்தில் உள்ள 30 பேருக்கு இளையோர் இயக்கத்தின் சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டது.

மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயத்தில் பொங்கல் விழா 14.01.2024 அன்று கொண்டாடப்பட்டது.

- **புனித தோமையார் ஆலயம் – முழுக்கோடு**



2024 ஜனவரி 6 அன்று தெனகா திருநாளை முன்னிட்டு மாலை 6 மணிக்கு ஆடம்பர திருப்பலியும் அதை தொடர்ந்து ஒளி ஏற்றல் விழாவும் சிறப்பாக நடைபெற்றன

2024 ஜனவரி 14 ஞாயிற்றுக்கிழமை அன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. திருப்பலியும் தொடர்ந்து பல்வேறு விளையாட்டு போட்டிகளும் நடைபெற்றது.

- **திருக்குடும்ப ஆலயம் – முக்கூட்டுகல்**

முக்கூட்டுகல் திருக்குடும்ப ஆலயத்திருவிழா 2024 ஜனவரி 05 வெள்ளிக்கிழமை முதல் 2024 ஜனவரி 15 திங்கள் வரை திருவிழா நடைபெற்றது.

## தக்கலை பிலாங்காலை

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை.

2024 ஜனவரி 6 ம் தேதி தெனகா திருநாள் கொண்டாடப்பட்டது.

பொங்கல் திருநாள் கொண்டாட்டம் ஜனவரி 15 அன்று நடைபெற்றது. உறவியங்களுக்குகிடையே பொங்கல் போட்டியும் பல்வேறு விளையாட்டு போட்டிகளும் நடைபெற்றது.

பங்குதந்தையின் குருத்துவ அருட்பொழிவின் வெள்ளி விழா மற்றும் பங்குதந்தை பெயர் கொண்ட விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.



### புனித சவேரியார் ஆலயம் – கைசாலவிளை

ஜனவரி 6 ம் தேதி தெனகா திருநாள் கொண்டாடப்பட்டது.

பங்குதந்தையின் குருத்துவ அருட்பொழிவின் வெள்ளி விழா மற்றும் பங்குதந்தை பெயர் கொண்ட விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## களியல்

### புனித மரியன்னை மறைவட்ட ஆலயம் – களியல்

14.01.2024 அன்று CMI துறவற சபையில் புதிதாக குருத்துவ அருட்பொழிவு பெற்ற அருட்தந்தையர்கள் இணைந்து தங்கள் நன்றி திருப்பலியை நிறைவேற்றினார்கள்.



### புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

2024 ஜனவரி 06 அன்று திருகாட்சி திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாலை 6.00 மணியளவில் அருடத்தந்தை அனில் ராஜ் அவர்களின் தலைமையில் ஆடம்பரத்திருப்பலியும், தொடர்ந்து உறவிய அடிப்படையிலான ஒளியின் திருவிழாவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

2024 ஜனவரி 14 ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலிக்கு பின் இளையோர் இயக்கம் சார்பாக பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

### புனித இரண்டாம் ஜாண் பால் ஆலயம் – குலசேகரம்

2024 ஜனவரி 07 ஞாயிற்றுக்கிழமை திருப்பலியைத் தொடர்ந்து திருத்தொண்டு வார துவக்கவிழா அருட்தந்தை ஜோஸ் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.



## சூசைபுரம்

### புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் – சூசைபுரம்

தெனகா திருநாள் கொண்டாட்டம் ஜனவரி 5 வெள்ளிக்கிழமை மாலை 5.45 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்பட்டு சிறப்பாக கொண்டாடப்பட்டது. தொடர்ந்து உறவிய அடிப்படையிலான ஒளியேற்றும் நிகழ்வு நடைபெற்றது.



2024 ஜனவரி 15 தமிழர் திருநாளான பொங்கல் திருநாளை முன்னிட்டு பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை 05.45 மணிக்கு உறவிய அடிப்படையில் பொங்கல் வைக்கப்பட்டது. தொடர்ந்து காலை 6.15 மணியளவில் உதவி பங்குத்தந்தை அருட்தந்தை ஜோஸ் அவர்கள் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

- **கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்**

2024 ஜனவரி 5 ஆம் தேதி மாலை 6.30 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது.

ஜனவரி 6 ம் தேதி தெனகாத் திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாலை 6.30 மணிக்கு ஆடம்பர திருப்பலியும் அதனை தொடர்ந்து உறவியங்கள் சார்பில் வாழைத்தண்டில் விளக்கேற்றும் போட்டியும் நடைபெற்றது. அனைத்து உறவியங்களும் சிறப்பாக அதில் பங்கேற்றனர்.

ஜனவரி 14-ஆம் தேதி ஞாயிறு காலை திருப்பலியை தொடர்ந்து கோலப்போட்டியும், விளைபொருள்களின் காணிக்கை பவனியும் நடைபெற்றது. மதியம் 2 மணிக்கு நட்டாலம் புனித தேவசகாயம் திருத்தலத்தில் சூசைபுரம் மறைவட்ட அளவில் நடைபெற்ற திருப்பலியில் பங்கு மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

ஜனவரி 17ஆம் தேதி காலை 6.30 மணிக்கு நடைபெற்ற திருப்பலியில் அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்களின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

- **புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை**

2024 ஜனவரி 6 அன்று தெனகா திருநாளை முன்னிட்டு மாலை 6 மணிக்கு ஆடம்பர திருப்பலியும் அதை தொடர்ந்து ஒளி ஏற்றல் விழாவும் சிறப்பாக பங்குத்தந்தை தலைமையில் நடைபெற்றன.

மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான ஜெபக்கூட்டம் 2024 ஜனவரி 13 அன்று மாலை 6.00 மணியளவில் திரு. ராஜேந்திர பாபு அவர்களது இல்லத்தில் வைத்து நடைபெற்றது.

2024 ஜனவரி 15 அன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. திருப்பலியும் தொடர்ந்து உறவியங்களின் வாயிலாக பொங்கல் மற்றும் கோலப்போட்டிகள் நடத்தப்பட்டன. மானவர்களுக்கு விளையாட்டு போட்டிகளும் நடைபெற்றது.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி ராஜிதா**

## MONTHLY AGENDA – FEBRUARY 2024

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 2 | Fri | 09.00 am | **SINAI** One Day Convention @ Vattakottai |
| 4 | Sun | 10.00 am | **KII** Forane Level Competitions<br>**SMYM** Parish Unit Visit @ Nithiravilai |
| 9 | Fri | 10.00 am | Fr.Philip Kodiyanthara Remembrance Holy Qurbana @ Kayalpuram |
| 10 | Sat | 10.00 am | **KII** Forane Level Competitions |
| 11 | Sun | 2.30 pm | **SMYM**: Thuckalay-Plankalai Forane Unit Visit @Plankalai |
| 13 | Tue | 10.00 am | Ongoing Formation for Priests @ Sangamam |
| 15 | Thu | 10.00 am<br>10.00 am | **PULARI** Heart Awareness Program @ Pulari School, Pudur<br>Finance Council Meeting @ Bishop's House |
| 16 | Fri | 10.00 am<br>5.30 pm | **PULARI** Heart Awareness Program @ Panpoli<br>**SINAI:** One Day Convention @ Palappallam & Soosaipuram Foranes |
| 17 | Sat | 5.30 pm | Fr. Mancherikalam Remembrance Holy Qurbana @ Nithiravilai |
| 18 | Sun | 10.00 am<br>2.00 pm<br>5.00 pm | **PULARI** Special Medical Camp @ Vanchinagar<br>CAT: Diocesan Level Quiz Competition @ Padanthalummoodu<br>**SMYM:** Thuckalay-Plankalai Forane Taize Prayer |

| | | | |
|---|---|---|---|
| 19 | Mon | 10.00 am<br>10.00 am | **KKSSS** Talent Fest Competitions @ Kalluvilai<br>Bishop's Visit to Tamil medium School: Annikkarai and Kamaraj Nagar |
| 20 | Tue | 09.00 am | **KKSSS:** Women's Day Celebration @ Palukal |
| 21 | Wed | 02.00 pm | Bishop's Visit to Tamil medium school: Varuthattu |
| 22 | Thu | 10.00 am | Bishop's Visit to Tamil medium school: Mankarai |
| 24 | Sat | 09.00 am | **SINAI** One Day Convention @ Sinai Retreat Center<br>Bishop's Visit to Tamil medium school: Mukoottukal and Arukani |
| 25 | Sun | 2.00 pm<br>2.00 pm<br>2.30 pm<br>3.00 pm | **KKSSS** Women's Day Celebration @ Kattathurai<br>**SMYM** Padanthalummoodu Forane Unit Visit<br>**KKSSS** Women's Day Celebration @ Chennamcode<br>**FA:** Forane Directors Meet @ Kalluvilai |
| 26 | Mon | 02.30 am | **KKSSS:** Women's Day Celebration @ Manjalummoodu |
| 26 | Tue | 09.30 am | Presbyteral Council Meeting |
| 27 | Wed | 2.30 pm | **KKSSS** Women's Day Celebration @ Pathukany |
| 28 | Thu | 2.00 pm | **KKSSS:** Women's Day Celebration @ Muzhucode |

**Fr. Thomas Powathuparambil, Protosyncellus**

## BISHOP'S ENGAGEMENTS - FEBRUARY 2024

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1-7 | Thu - Wed | | Bangalore: CBCI Conference |
| 8-9 | Thu - Fri | | Mangalore |
| 10 | Sat | 06.00 pm | Madurai: Feast day Holy Qurbana |
| 11 | Sun | 09.00 am<br>04.30 pm | Madurai: World day of the Sick Health Camp<br>Kumbakonam: Episcopal Ordination |
| 12 | Mon | 05.00 pm | Thadikarakonam: Ash Monday Holy Qurbana |
| 13 | Tue | 10.00 am | Sangamam: Ongoing formation for Priests |
| 14 | Wed | 10.00 am<br>07.00 pm | Sangamam: Presentation of annual report of departments<br>Bishop's House: Welcome to new priest |
| 15 | Thu | 09.30 am<br>11.00 am | Bishop's House: Curia meeting<br>Bishop's House: Finance committee meeting |
| 16 | Fri | 10.00 am<br>02.00 pm | Kalluvilai: AIDACT Talent Fest<br>Bishop's House: Meeting |
| 17 | Sat | 11.00 am<br>02.00 pm | Bishop's House: Meeting with Ramanathapuram Deacons<br>Bishop's House: Meeting with Convention committee |
| 18 | Sun | 7.00 am | Kaliyal: Pastoral Visit |
| 19 | Mon | 10.00 am<br>05.00 pm | Annikkarai and Kamaraj Nagar: Tamil medium school visit<br>Mukkoottukal: Visit to Minor Seminary |
| 20 | Tue | 10.30 am | Bishop's House: Meeting with Junior priests |

| | | | |
|---|---|---|---|
| 21 | Wed | 09.30 am<br>02.00 pm | Bishop's House: Meeting with Deacons' parents<br>Varuthattu: Tamil medium school visit |
| 22 | Thu | 10.00 am<br>04.00 pm | Mankarai: Tamil medium school visit<br>Kuzhithurai: Episcopal Ordination |
| 23 | Fri | 09.30 am | Bishop's House: Meeting with Deacons |
| 24 | Sat | 10.00 am | Mukkoottukal and Arukani: Tamil medium school visit |
| 25 | Sat | 08.00 am | Vayalinkarai: Pastoral Visit |
| 26 | Mon | 11.00 am | Mallapally: Remembrance Holy Qurbana for Fr Sebastian |
| 27 | Tue | 09.30 am | Sangamam: Presbyteral council meeting |
| 28 | Wed | 09.30 am | Thuckalay: Curia Meeting |
| 29 | Thu | 05.00 pm | Nithiravilai: Karunai Illam Annual Day |

**Fr. Liju Mathew, Bishop's Secretary**

# குழித்துறை மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர்

குழித்துறை மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக அருட்பணி ஆல்பர்ட் அனஸ்தாஸ் அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். திருச்சிராப்பள்ளி, புனித பவுல் குருமடத்தில் பேராசிரியராக பணியாற்றி வரும் அருட்பணி ஆல்பர்ட் அவர்கள் 1966 ஆம் ஆண்டு டிசம்பர் 16 ஆம் தேதி மணப்பாறை ஊரில் பிறந்தவர். மதுரை, அருளானந்தர் கல்லூரியில் இறையியல் படிப்பையும், திருச்சி, புனித பவுல் கல்லூரியில் தத்துவவியல் படிப்பையும் பயின்ற இவர் 1992 ஏப்ரல் 26 ஆம் நாள் கோட்டார் மறைமாவட்டத்தில் அருட்பணியாளராக திருதலைப்படுத்தப்பட்டார். 2024 ஜனவரி 13 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் குழித்துறை மறைமாவட்ட ஆயராக அறிவிக்கப்பட்டுள்ளார். ஆயர் திருநிலைப்பாடு நிகழ்வுகள் 2024 பிப்ரவரி 22 ஆம் நாள் நட்டாலம் புனித தேவசகாயம் திருத்தல ஆலயத்தில் வைத்து நடைபெற உள்ளது.



**SMYM - Leaders' Training and Pongal celebration, 2024 January 15 @ Kalluvilai**




**Priests' Conference, 2024 January 16 @ Sangamam**




**Silver Jubilee Celebration of Jothi Nilayam, Palappallam - 2024 January 30**

# வாழ்த்துக்கள்



சீரோ மலபார் திருச்சபையின் புதிய
உயர் பேராயர் மார் ராஃபேல் தட்டில்

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570